

# SIVAPURANAM MISSION

www.Sivapuranam.in

திருச்சிற்றம்பலம்

# 13. திருப்பூவல்லி

(தில்லையில் அருளியது)

மாயாவிசயம் நீக்குதல்

(தரவு கொச்சகக்கலிப்பா)





## திருச்சிற்றம்பலம்

இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தேன்
அணையார் புனல்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
புணையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ





எந்தைஎந்தாய் சுற்றம் மற்றும்எல்லாம் என்னுடைய
பந்தம் அறுத்துஎன்னை ஆண்டுகொண்ட பாண்டிப்பிரான்
அந்த இடைமருதில் ஆனந்தத் தேன்இருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ





நாயிற் கடைப்பட்ட நம்மையும்ஓர் பொருட்படுத்துத்
தாயிற் பெரிதும் தயாவுடைய தம்பெருமான்
மாயப் பிறப்புஅறுத்து ஆண்டான்என் வல்வினையின்
வாயிற் பொடிஅட்டிப் பூவல்லி கொய்யாமோ

3





பண்பட்ட தில்லைப் பதிக்குஅரசைப் பரவாதே
எண்பட்ட தக்கன் அருக்கன் எச்சன் இந்துஅனல்
விண்பட்ட பூதப் படை வீரபத்திரரால்
புண்பட்ட வாபாடிப் பூவல்லி கொய்யாமோ





தேன்நாடு கொன்றை சடைக்குஅணிந்த சிவபெருமான்
ஊன்நாடி நாடிவந்து உள்புகுந்தான் உலகர்முன்னே
நான்ஆடி ஆடிநின்று ஓலமிட நடம்பயிலும்
வான்நாடர் கோவுக்கே பூவல்லி கொய்யாமோ.




எரிமூன்று தேவர்க்கு இரங்கிஅருள் செய்தருளிச்
சிரமூன்று அறத்தன் திருப்புருவம் நெரித்தருளி
உருமூன்றும் ஆகி உணர்வுஅரிதாம் ஒருவனுமே
புரமூன்று எரித்தவா பூவல்லி கொய்யாமோ





வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீரடியார்கூட்டமும் வைத்து எம்பெருமான்
அணங்கொடு அணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ

7





நெறிசெய்து அருளித்தன் சீரடியார் பொன்னடிக்கே
குறிசெய்து கொண்டுஎன்னை ஆண்டபிரான் குணம்பரவி
முறிசெய்து நம்மை முழுதுடற்றும் பழவினையைக்
கிறிசெய்த வாபாடிப் பூவல்லி கொய்யாமோ





பன்னாள் பரவிப் பணிசெய்யப் பாதமலர்
என்ஆகம் துன்னவைத்த பெரியோன் எழிற்சுடராய்க்
கல்நார் உரித்துஎன்னை ஆண்டுகொண்டான்
கழல்இணைகள்
பொன்ஆன வாபாடிப் பூவல்லி கொய்யாமோ.





பேராசையாம் இந்தப் பிண்டம்அறப் பெருந்துறையான்
சீரார் திருவடிஎன் தலைமேல் வைத்தபிரான்
காரார் கடல்நஞ்சை உண்டுஉகந்த காபாலி
போரார் புறம்பாடிப் பூவல்லி கொய்யாமோ

10





பாலும் அமுதமும் தேனுடனாம் பராபரமாய்க்
கோலம் குளிர்ந்துள்ளம் கொண்டபிரான் குரைகழல்கள்
ஞாலம் பரவுவார் நன்னெறியாம் அந்நெறியே
போலும் புகழ்பாடிப் பூவல்லி கொய்யாமோ





வானவன் மால்அயன் மற்றும்உள்ள தேவர்கட்கும்
கோனவனாய் நின்று கூடல்இலாக் குணக்குறியோன்
ஆனநெடுங்கடல் ஆலாலம் அமுதுசெய்யப்
போனகம் ஆனவா பூவல்லி கொய்யாமோ





அன்றுஆல நீழல்கீழ் அருமறைகள் தான்அருளி
நன்றாக வானவர் மாமுனிவர் நாள்தோறும்
நின்றார ஏத்தும் நிறைகழலோன் புனைகொன்றைப்
பொன்தாது பாடிநாம் பூவல்லி கொய்யாமோ





படம்ஆக என்உள்ளே தன்இணைப்போது அவை
அளித்துஇங்கு

இடம்ஆகக் கொண்டிருந்த ஏகம்பம் மேயபிரான்
தடம்ஆர் மதில்தில்லை அம்பலமே தான்இடமா
நடம்ஆடு மாபாடிப் பூவல்லி கொய்யாமோ





அங்கி அருக்கன் இராவணன் அந்தகன் கூற்றன்
செங்கண் அரிஅயன் இந்திரனும் சந்திரனும்
பங்கம்இல் தக்கனும் எச்சனும்தம் பரிசுஅழியப்
பொங்கியசீர் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ





திண்போர் விடையான் சிவபுரத்தார் போர்ஏறு
மண்பால் மதுரையில் பிட்டுஅமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்டரா
புண்பாடல் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ





முன்னாய மால்அயனும் வானவரும் தானவரும்
பொன்னார் திருவடி தாம்அறியார் போற்றுவதே
என்ஆகம் உள்புகுந்து ஆண்டுகொண்டான் இலங்கு அணியாம்
பன்நாகம் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ





சீரார் திருவடித் திண்சிலம்பு சிலம்புஒலிக்கே

ஆராத ஆசையதாய் அடியேன் அகம்மகிழத்

தேரார்ந்த வீதிப் பெருந்துறையான் திருநடஞ்செய்

பேரானந்தம் பாடிப் பூவல்லி கொய்யாமோ





அத்தி உரித்துஅது போர்த்தருளும் பெருந்துறையான்
பித்த வடிவுகொண்டு இவ்வுலகில் பிள்ளையுமாம்
முத்தி முழுமுதல் உத்தரகோச மங்கைவள்ளல்
புத்தி புகுந்தவா பூவல்லி கொய்யாமோ





மாவார ஏறி மதுரைநகர் புகுந்தருளித்

தேவார்ந்த கோலம் திகழப் பெருந்துறையான்

கோவாகி வந்துஎம்மைக் குற்றேவல் கொண்டுஅருளும்

பூவார் கழல்பரவிப் பூவல்லி கொய்யாமோ



ஸ்ரீ மாணிக்கவாசகர்